**MCOP.No.1/2023**
**20.01.2026**

ம.சா.1 – திரு. ராஜேஷ்

<u>3–ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u> –

1. எனது வயது, வேலை, வருமானம் ஆகியவற்றை காட்டுவதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 1–ஆம் எதிர்மனுதாரர் சாலை விதிகளை மதித்துதான் வாகனத்தை ஓட்டி வந்தார் என்றாலும், நான்தான் சாலை விதிகளை மதிக்காமல் வாகனத்தை ஓட்டி வந்தேன் என்றாலும், அதனால்தான் மேற்படி விபத்து ஏற்பட்டது என்றாலும் சரியல்ல. விபத்திற்கு என்னுடைய கவனக்குறைவும், அஜாக்கிரதையும் மட்டும்தான் காரணம் என்றால் சரியல்ல. எனக்கு இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் பழகுநர் உரிமம் வைத்திருந்தேன். மேற்படி பழகுநர் உரிமத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். பழகுநர் உரிமம் வைத்துள்ள நபர் அவருடன் வாகனத்தை ஓட்டக்கூடிய ஓட்டுநர் உரிமம் உள்ள நபரை அருகில் வைத்துக் கொண்டுதான் ஓட்ட வேண்டும் என்றாலும், மேலும் குறிப்பிட்ட இடத்திற்குள்தான் வாகனத்தை ஓட்ட வேண்டும் என்றாலும் சரிதான்.

2. அவ்வாறு என்னுடன் வாகனத்தை ஓட்ட தெரிந்த நபர் ஒருவரை என்னுடன் வைத்துக் கொள்ளாமல் உரிமத்தில் குறிப்பிட்ட பகுதியை விட்டு ஓட்டியதால்தான் மேற்படி விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயங்கள் அனைத்தும் சாதாரண காயம் என்றாலும், அவை தற்போது குணமாகி விட்டது என்றாலும் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயங்கள் அனைத்தும் சாதாரண காயம் என்பதால் எந்தவித நிரந்தர வருமான இழப்பும் எனக்கு ஏற்படவில்லை என்றால் சரியல்ல. மருத்துவ பில்கள் அனைத்தும் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. ம.சா.ஆ.20–இல் குறிப்பிடப்பட்டுள்ள மருத்துவ பில்களுக்கான கன்சாலிடேட் மெடிக்கல் பில்ஸ் தாக்கல் செய்யவில்லை என்பதால் ம.சா.ஆ.20–க்கான தொகை எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. ம.சா.ஆ.10, 11, 18 மற்றும் 19 ஆகிய பில்களுக்கான கன்சாலிடேட் மெடிக்கல் பில்ஸ் தாக்கல் செய்யவில்லை என்பதால் அதற்கான தொகை எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. மேற்படி மருத்துவ பில்களில் பணம் பெற்றுக் கொண்டதற்கான கையெழுத்து இல்லை என்பதால் அதற்கான தொகையும் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

3. ம.சா.ஆ.10–லிருந்து ம.சா.ஆ.20 வரையான பில்களை வழங்கிய மருத்துவமனை அதிகாரிகளை அழைத்து விசாரித்தால்தான் அதன் உண்மைதன்மை தெரிய வரும் என்றால் சரியல்ல. 1–ஆம் எதிர்மனுதாரருக்கு விபத்து சமயத்தில் செல்லுபடியாகக்கூடிய ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் எனக்கு தெரியாது. காப்பீடு விதிகளும், ஓட்டுநர் உரிமம் விதிகளும் மீறப்பட்டுள்ளதால் 3–ஆம் எதிர்மனுதாரர் எவ்வித இழப்பீடும் வழங்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் வழக்கிற்காக இழப்பீடு அதிகம் பெறுவதற்காக உருவாக்கப்பட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பல்வேறு தலைப்புகளில் கேட்கப்பட்டுள்ள இழப்பீடு தொகை மற்றும் வட்டி விகிதங்கள் அதிகமானது என்றால் சரியல்ல.

ம.வி. இல்லை.

/True copy/

Sd/– A. Maruthupandi,
Subordinate Judge, Ambasamudram.

Uploaded on 20.01.2026.